சட்ட ஒழுங்கு தவறிய தலைமைத் தேர்தல் ஆணையரைப் பதவி விலகக் கோரி

போராட்டம் நடத்த நாட்டு மக்களுக்கு உரிமை இல்லையா? ஓரணியில் ஒன்று சேர்ந்து, ஒன்றிய பாசிச சூழ்ச்சியை வீழ்த்துவீர்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, அக்.12-

வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளில் முறைகேடு நடந்ததை முன்னிறுத்தி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் செயல்பாடுகள் மற்றும் வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்புத் திருத்தப் பணிகள், நடைமுறைகள், முறைகேடான செயல்பாடுகளுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பல்வேறு - அமைப்புகள், மாணவர்கள் குறிப்பாக கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் தீவிரப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். உச்சநீதி மன்றத்திலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வழக்கின் பின்னணி!

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி (SIR) மற்றும் இதர தேர்தல் ஆணைய முடிவுகளில் மற்ற தேர்தல் ஆணையர்களின் ஒப்புதலைப் பெறாமல், தன்னிச்சையாகச் செயல்பட்டதாகக் கூறி, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி, உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், தேர்தல் ஆணையத்திற்கும், ஒன்றிய அரசுக்கும் தாக்கீது அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

வழக்கு விசாரணை ஒரு பக்கத்தில் நடந்துகொண்டிருக்கையில், வீதிகளில் இறங்கித் தீவிரமான போராட்டங்களும் இன்னொரு பக்கம் நடந்து வருகின்றன.

போராட்டத்திற்குக் காரணமானவை குறித்து ஆலோசித்து, உரிய முடிவுகளை எடுக்கவேண்டிய ஒன்றிய பி.ஜே.பி. அரசு - அதற்கு விரோதமாக போராட்டத்தை ஒடுக்கும் முறையில் தீவிரம் காட்டி வருகிறது. நேற்று (10.10.2026) டில்லியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள்மீது காவல் துறையினர் மேற்கொண்ட அடக்குமுறைகளும், வன்முறை நடவடிக்கைகளும் சொல்லுந்தரமன்று. 41 ஆயிரம் காவல் துறையினர், துணை இராணுவப் படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

போராட்டத்தில் கலந்து கொள்ள வருபவர்களைத் தடுக்கும் வகையில், போக்கு வரத்துகள் முடக்கப்பட்டன. டில்லிக்கு வரவேண்டி எக்ஸ் பிரஸ் ரயில்கள் ரத்து செய்யப்பட்டன. தலைநகரில் உள்ள 50-க்கும் மேற்பட்ட மெட்ரோ ரயில் நிலையங்கள் இயங்கவில்லை. டில்லியில் 163 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டிருந்த ஜந்தர் மந்தரைச் சுற்றி 4 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு செல்போன் இணைய தொடர்புகள் துண்டிக்கப்பட்டன.

போராட்டத்தை ஒடுக்க வேண்டும், பிசுபிசுக்கச் செய்யவேண்டும் என்ற திட்ட த்தில், இவ்வளவுக் கடுமையான ஏற்பாடுகளை செய்திருந்தாலும், இவற்றை எல்லாம் முறியடித்து, மாணவர்களும், இளைஞர்களும் ஜந்தர் மந்தர் பகுதிக்கு ஆயிரக்கணக்கில் குவிந்துவிட்டனர்.

மும்பையில் இருந்து டில்லிக்குப் புறப்பட்டு வந்த கரப்பான்பூச்சி ஜனதா கட்சியின் நிறுவனர் அபிஜித் தீப்கே மற்றும் பிற நிர்வாகிகள் டில்லி விமான நிலையத்திற்கு நேற்று (10.10.2026) காலை வந்து சேர்ந்தனர். இதனை மோப்பம் பிடித்த காவல்துறையினர், விமானத்திற்குள்ளேயே நுழைந்து அவர்களைக் கைது செய்தனர். ஒரு ஜனநாயக நாட்டில் உரிமைகளுக்காகப் போராடக் கூட உரிமை கிடையாது என்கிற அளவுக்கு நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சி பாசிச வெறி கொண்டு பாய்கின்றது என்பதற்கு இதை விட வேறு எடுத்துக்காட்டுத் தேவையோ!

ஒன்றிய அரசின் எல்லா வகையான அடக்குமுறைகளையும் சந்திக்கப் போராட்



டக்காரர்கள் குவிந்து கொண்டே இருந்தனர். 5000-த்திற்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

ஏற்கெனவே இளைஞர்களின் எழுச்சிப் போராட்டத்தால் ஒன்றிய அமைச்சர் பதவியிலிருந்து விலகி ஓடும்படி நேர்ந்தது. அதை மனதிற் கொண்டு, ஆத்திரப்பட்டு, வேகங்கொண்டு, அடக்கு முறை ஆயுதத்தை மிகக் கூர்மைப்படுத்தி, நேற்று (10.10.2026) ஏவியுள்ளனர் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

முன்னாள் முதலமைச்சர்களும் கைது!

கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினரின் போராட்டத்திற்கு ஆதரவுக் கரம் நீட்ட முன்வந்த மேனாள் முதலமைச்சர்கள் மம்தா, பினராயி விஜயன், அரவிந்த் கெஜ்ரிவால், மாணிக்சர்க்கார் ஆகியோரையும் கைது செய்து, வாகனங்களில் ஏற்றிச் சென்றனர். முதலமைச்சர்களுடன் வந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் கைது செய்யப்பட்டனர். சி.பி.எம். பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி மற்றும் பிருந்தா காரத் போன்றவர்களும் கைது செய்யப்பட்டனர். இவ்வளவுக்கும் மாணவர்களும், இளைஞர்களும், முன்னாள் முதலமைச்சர்களும் என்ன குற்றம் செய்து விட்டனர்? ஏன் இவ்வளவு அராஜகம் அரசு தரப்பில்?

தேர்தல் ஆணையத்தைப் பயன்படுத்தி, தேர்தல்களில் பி.ஜே.பி. வேட்பாளர்கள் வெற்றி பெறவேண்டும் என்பதற்காக, திட்டமிட்டு செயல்பட்டது ஒன்றிய அரசு என்பது வெட்ட வெளிச்சத்திற்கு வந்துவிட்டது.

தேர்தல் ஆணையர்களைத் தேர்வு செய்யும் குழுவில், உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியும் இடம் பெற்றிருக்க வேண்டும் என்றிருந்த சட்ட நிலையை நீக்கி, பிரதமரும், ஒன்றிய அமைச்சர் ஒருவரும், எதிர்க்கட்சித் தலைவரும் இடம்பெறச் செய்ய வேண்டும் என்கிற ஏற்பாட்டின் பின்னணி என்ன?

மூன்று உறுப்பினர்களில் இருவர் பெரும்பான்மை (பி.ஜே.பி.) பெறவேண்டும்; அதன்மூலம் தேர்தல் ஆணையத்தைத் தன் விருப்பத்திற்கு ஏற்ப செயல்பட வைக்க வேண்டும் என்ற சூழ்ச்சி தானே இதன் நோக்கம். நடந்து முடிந்த பல்வேறு மாநிலத் தேர்தல்களிலும் பி.ஜே.பி. திட்டமிட்டது தானே நடந்திருக்கிறது. தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் தன்னிச்சையாக, தானடித்த மூப்பாக மற்ற இரு உறுப்பினர்களையும் கலந்து ஆலோசிக்காமலும், இன்னும் சொல்லப் போனால், அவ்விருவரும் கூறியவற்றை நிராகரித்தும், பி.ஜே.பி.க்கு ஆதரவானப் போக்கில்தானே செயல்பட்டுள்ளார் என்ற பூனைக்குட்டி வெளியில் வந்துவிட்டதே!

13 கோடி வாக்காளர்கள் பட்டியலிலிருந்து தந்திர உபாயத்தால் திட்டமிட்டு நீக்கப்பட்டுள்ளனரே! அதன் பலன் ஆளும் பி.ஜே.பி.,க்குச் சுளையாகக் கிடைத்து விட்டது என்ற உண்மை, ஆய்வுப் பூர்வமாக வெளிவந்துவிட்ட காரணத்தால், ஆளும் தரப்புக்கு நெரி கட்டிவிட்டது. அதனுடைய அளப்பரிய ஆத்திரம்தான், எதிர்ப்பாளர்களைக் கண்மூடித்தனமாக வேட்டை ஆடுவதாகும்.

இதில் என்ன 'அராஜகம்', கொடுமை என்றால், தங்கள் நலனுக்காக எந்த எல்லைக்கும் செல்லும் ஆளும் பி.ஜே.பி. தரப்பு என்பதற்குச் சாட்சியம்தான், தங்களின் சதித் திட்டத்திற்கு உச்சநீதி மன்றத்தையும் பொய்ச் சாட்சிக்கு அழைத்திருப்பதுதான்.

ஆனால், உச்சநீதிமன்றம் பி.ஜே.பி.யின் பொய் முகத்தை அம்பலப்படுத்தி விட்டதே! எந்த முகத்தை வைத்துக்கொண்டு பிரதமரோ, ஆளும் பி.ஜே.பி.யோ வெளியில் நடமாட முடியும்?

உச்ச நீதிமன்றத்தின் நிலைப்பாடு என்ன?

இந்த வழக்கு, தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தபோது, உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவான விளக்கத்தை அளித்தது.

மனுதாரர்கள் தரப்பு வாதங்களைக் கேட்ட தலைமை நீதிபதி, "தேர்தல் ஆணையத்தால் மாற்றப்பட்ட 'படிவம் 6'க்கு உச்ச நீதிமன்றம் எவ்வித ஒப்புதலும் அளிக்கவில்லை (We didn't approve modified Form 6). இதில் மிகவும் தெளிவாக இருக்க வேண்டும்" என்று திட்டவட்டமாகக் கூறினார்.

இதற்கு மேலும் ஒரு நொடி நேரம் தேர்தல் ஆணையத்தின் தலைமை ஆணையர் பதவி நீடிக்கலாமா?

இவருக்குத் துணையாக இருந்த ஆட்சிக்குப் பாடம் கற்பிக்க மக்கள் தயாராக வேண்டாமா?

எதிர்க்கட்சிகளும் இதற்குப் பிறகு ஒன்றிய அரசை வீழ்த்துவதே ஒரே இலக்கு என்ற முனைப்பில் இறங்க வேண்டாமா?

எச்சரிக்கை!

எச்சரிக்கை!!

குதிரை பேரம்,
வாக்காளர் சேர்ப்பில் வடிகட்டிய மோசடி,
அதிகார பலம்,
காவல்துறை,
இராணுவ பலம்,
பண பலம்,

பத்திரிகை பலம் இவற்றின் மூலம் மக்களின் முதுகெலும்பை முறித்து, ஹிந்து ராஜ்ஜியத்தை அமைக்கத் துடிக்கும் ஒற்றை ஆட்சித் திட்டம் இவற்றின் பெருக்குத் தொகைதான் பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ்., சங் பரிவார்கள் - எச்சரிக்கை! எச்சரிக்கை!!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(10.10.2026)



1. திருப்பூர் ஏபிடி சாலையில் முன் விரோதம் காரணமாக, கல்லூரி மாணவர் வெட்டிக் கொலை. பட்ட பகலில் பயங்கரம்....

2. சென்னை அடுத்த புழல் அருகே ஒன்பது வயது சிறுமியிடம் பாலியல் தொல்லையில் ஈடுபட்ட தற்காலிக அரசு ஊழியர் சிக்கினார்....

3. கன்னியாகுமரி கலெக்டர் அலுவலகம் அருகே ரோட்டில் நடந்து சென்ற சாஃப்ட்வேர் நிறுவன பெண் ஊழியருக்கு பாலியல் தொல்லை கொடுத்த வாலிபர் சிக்கினார் ...

4. சென்னை எண்ணூர் நேரு நகரில் கொடுத்த நகையை திருப்பி கேட்ட இளம் பெண் மீது சரமாரியாக தாக்கிய ரவுடி ....

5. சென்னை கொளத்தூர் பேப்பர் மில் சாலையில் இரும்பு கடை உரிமையாளரை வழி மறித்து கத்தியை காட்டி பணம் பறித்த ரவுடி சிக்கினார்...



6. திருச்சி டவுனில் நடந்து சென்ற இளம் பெண்ணிடம் செயினை பறிக்க முயன்ற ஹெல்மெட் ஆசாமி . சிசிடிவி காட்சிகள் வெளியாகி வைரல் ஆனது ....

7. திருச்சி கண்ட்டோன்மென்ட் போலீஸ் ஸ்டேஷன் அருகே உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் பூட்டை உடைத்து கொள்ளை முயற்சி ...

8. சென்னை வியாசர்பாடி அரசு பேருந்தில், கொலை செய்ய வேண்டுமானால் என்னை தொடர்பு கொள்ளுங்கள் என்று செல்போன் எண்ணுடன் துண்டுப் பிரசுரம் ஒட்டி இருந்ததால் பரபரப்பு ...



9. சென்னையை அடுத்த ஆவடி அருகே பிரதமர் மோடி வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து கருப்பு கொடி காட்டிய போலீஸ்காரர்....

10. மதுரை அலங்காநல்லூர் , மற்றும் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி, ராணிப்பேட்டை உள்ளிட்ட தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் 5 மணி நேரத்திற்க்கும் மேலாக மின்வெட்டு. ஒரு வாரமாக தொடர்ச்சியாக மின்வெட்டு ஏற்படுவதாகவும், புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை எனவும் மக்கள் சாலை மறியலில் ஈடுபட்ட மக்கள்...

பாரத் மித்ரன் சமூக பொருளாதார மேம்பாட்டு அறக்கட்டளை சின்ன நெற்குணம்

ஷிவானி கல்வி அறக்கட்டளை சார்பில் இலவச கண் சிகிச்சை முகாம்!

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக் 12-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த வல்லம் வட்டார வளமையம் யவளாகத்தில்

பாரத் மித்ரன் சமூகப் பொருளாதார மேம்பாட்டு அறக்கட்டளை மற்றும் புதுச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனை, சின்ன நெற்குணம் ஷிவானி கல்வி அறக்கட்டளை மற்றும் முதியோர் இல்லம் நிறுவனர் தமிழ் மொழி

கொங்கரப்பட்டு கிராம நிர்வாக அலுவலர் லட்சுமணன் ஆகிய முன்னிலை வகித்தனர்.

பாரத் மித்ரன் அறக்கட்டளை பொதுச் செயலாளர் அறவாழி அனைவரையும் வரவேற்றார்

நிகழ்ச்சியில் கண் பொறை, சர்க்கரை நோய், கண்ணீர் அழுத்த நோய், குழந்தைகளின் கண் நோய், கிட்ட பார்வை, தூரப்பார்வை, வெள்ளெழுத்து ஆகிய நோய்களுக்கு பரிசோதனை செய்து ஆலோசனை வழங்கப்பட்டது. கண் அறுவை சிகிச்சைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் பாண்டிச்சேரி அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்

நிகழ்ச்சியில் வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,வல்லம் மத்திய ஒன்றிய செயலாளர் இளம்வழுதி, கூடுதல் அரசு வழக்கறிஞர் சக்திவேல், டாக்டர்ஆனந்த முருகன், வல்லம் ஒன்றிய கவுன்சிலர் லட்சுமி லட்சுமணன், ஊராட்சி மன்ற தலைவர் சகுந்தலா மகாலிங்கம்நிர்வாகிகள் தமிழரசன், கிருஷ்ணமூர்த்தி, கார் வண்ணன், மாவட்ட தலைமை ஒருங்கிணைப்பாளர் அன்பழகன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பாலகுமாரன், மாவட்டச் செயலாளர் கமலா, செஞ்சி ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் ரமேஷ், வல்லம் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் உதயகுமார், மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். மாவட்ட பாரத் மித்ரன் அறக்கட்டளை மாநில ஒருங்கிணைப்பாளர் அகலூர் ஜோலார் தாஸ் முகாமிற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தார்.

ஒருங்கிணைப்பாளர் பர்வீன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. வேண்டுகோள்!

சேலம், அக்.12-

சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட கழக செயற்குழுக் கூட்டம் 14-10-2026 புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வாழப்பாடியில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில் தலைமைக் கழகப் பிரதிநிதிகளான, கழக சட்டத்திட்டத் திருத்தக்குழு செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன்,MP மற்றும் கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் அழகிரி சதாசிவம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை கழக செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர், கழக செயலாளர்கள், முன்னாள், இன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், கழக சார்பு அணி அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 22.08.2026 அன்று அண்ணா அறிவாலயத்தில் கழக தலைவர் தலைமையில் நடைபெற்ற தலைமை செயற்குழுக்கூட்டத்தில் கழக நிர்வாக மறுசீரமைப்பு தீர்மானத்தின்படி ஒன்றிய, நகர, கழகம் மறுசீரமைப்பு குறித்து,

கழக வளர்ச்சி பணிகள்

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

த.வெ.க.ஆட்சியில் தொடரும் மின் வெட்டு

கும்மிடிப்பூண்டியில் மின்வெட்டால் பொதுமக்கள் அவதி!

விஜய் அரசைக் கண்டித்து பொதுமக்கள் சாலை மறியல்

கும்மிடிப்பூண்டி, அக்.12-

கும்மிடிப்பூண்டியில் நள்ளிரவில் நிலவிய மின்வெட்டால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். தவெக அரசின் அலட்சியத்தைக் கண்டித்து, சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது.

தவெக ஆட்சிக்கு வந்தது முதல் தமிழ்நாட்டில் மின்வெட்டு பிரச்சனை தலைவிரித்தாடுகிறது. குறிப்பாக இரவில் அமலாகும் மின்வெட்டால் தூக்கத்தை இழந்து மக்கள் தவிக்கின்றனர். இப்படி மக்கள் சொல்லொண்ணா துயரத்தில் தவிக்கும் நிலையில், அதையெல்லாம் பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல் ரீல்ஸ் போடுவதில் த.வெ.க. அரசு கவனம் செலுத்தி வருகிறது.

இந்த நிலையில் திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டியில் நள்ளிரவில் அறிவிக்கப்படாத மின்வெட்டு அமலானது. சுமார் 4 மணி நேரம் நீடித்த மின்வெட்டால் மக்கள் தூக்கமின்றி புழுக்கத்தில் தவித்தனர். ஒரு கட்டத்தில் ஆத்திரமடைந்த மக்கள், சென்னை கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையின்புறவழிச் சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாட்டில்: கிலோ ரூ.120க்கு வெங்காயம் விற்பனை!

தரமற்ற வெங்காயத்தை கொள்முதல் செய்த த.வெ.க. அரசு!

பொதுமக்கள் குற்றச்சாட்டு!

சென்னை, அக்.12-

தமிழ்நாட்டில் செயலற்ற தவெக அரசால் அரிசி, சர்க்கரை, பருப்பு, காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக வெங்காயத்தின் விலை அதிகரித்து ஒரு கிலோ 120 ரூபாய் வரை விற்கப்படுகிறது. வெங்காயத்தின் விலையை கேட்டாலே பொதுமக்களுக்கு கண்ணீர் வருகிறது.

இதனிடையே, வெளி மாநிலங்களில் இருந்து, தமிழ்நாடு அரசு இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்ட அமைப்பு மற்றும் தேசிய நுகர்வோர் கூட்டுறவு இணையத்திடமிருந்து வெங்காயம் கொள்முதல் செய்துள்ளது.

தமிழ்நாட்டிற்கு கொள் முதல் செய்யப்பட்ட 700 டன் மெட்ரிக் வெங்காயம் வியாசர்பாடி சரக்கு ரயில் முனையத்திற்கு வந்தது. கூட்டுறவுத்துறை அமைச்சர் காந்திராஜன் பார்வையிட்டார். அப்பொழுது கொள் முதல் செய்யப்பட்ட வெங்காயம் சிறியதாகவும், தரமற்றதாகவும் இருப்பதாக பொதுமக்கள் கூறியதால், அவர் ஆய்வினை பாதியிலேயே நிறுத்திவிட்டு அங்கிருந்து வெளியேறினார்.

காஞ்சி வடக்கு மாவட்ட வர்த்தக அணித் தலைவர்

சிப்ஸ் மணி (எ) கே.சுப்பிரமணி மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

காஞ்சிபுரம், அக்.12-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வர்த்தக அணித் தலைவரும் தலைமைக் கழகப் பேச்சாளரும் தாம்பரம் மாநகரம் 53வது வட்டக் கழகப் பொருளாளருமான கே.சுப்பிரமணி என்கிற சிப்ஸ் கே.எஸ்.மணி (வயது 78) இயற்கையெய்தினார் என்பதை தெரிவிக்க வருந்துகிறோம்.

தமிழ்நாட்டின் தென்கு மரி முனையில் அமைந்துள்ள நாகர்கோயில் வடசேரி பகுதியில் தனது இளமைக் காலம் தொட்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தில், அண்ணா, கலைஞர்,கழகத் தலைவர் தளபதி அவர்களின், பாதையில் பயணித்து, பல ஆண்டுகளாக தாம்பரத்தில், வசித்து வரும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட வர்த்தகர் அணித் தலைவர் சிப்ஸ் கே.எஸ். மணி அவர்கள் நேற்று (11.10.2026 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5.30 மணி அளவில் மறைவெய்தினார்.



மறைவுச் செய்தி அறிந்தும் காஞ்சி வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், தாம்பரம் மாநகரக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் அவரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

அவரது இறுதி ஊர்வலம் இன்று (12.10.2026 - திங்கட் கிழமை) மாலை 4 மணி அளவில், 07, விஷ்ணு நகர் மேற்கு தாம்பரம் கிருஷ்ணா நகர் அருகில், அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு மேற்கு தாம்பரத்தில் உள்ள இடுகாட்டில் நல்அடக்கம் செய்யப்படும் என்பதை கனத்த இதயத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

மணிப்பூரில் வன்முறை!

மணிப்பூர், அக்.12-

மணிப்பூர் மாநிலத்தில் குகி நாகா சமூகங்களுக்கு இடையே மீண்டும் வன்முறை வெடித்துள்ளது. 24 மணி நேரத்தில் துப்பாக்கிச் சூடு, உள்ளிட்ட வன்முறை சம்பவங்களில் 9 பேர் உயிரிழந்தனர். 14 வீடுகள் தீவைத்துக் கொளுத்தப்பட்டன.

காம்ஜோங் மாவட்டம் சாசாத் காவல் நிலையம் அருகே, சட்டவிரோத பதுங்கு குழிகளை அழிக்கும் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கையின்போது ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில், ஐந்து குழந்தை களுக்குத் தாயான குகி பழங்குடியின பெண் உயிரிழந்தார். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து இரு சமூகங்களுக்கும் இடையே மீண்டும் மோதல் வெடித்தது.

மலை மாவட்டங்களான காம்ஜோங், உக்ருல் மற்றும் காங்போக்பி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற இந் வன்முறை சம்பவங்களில் 9 பேர் உயிரிழந்தனர். 14 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

டெல்லியிலிருந்து சென்னை வந்த

விமானத்தில் தீ பற்றி எரிந்ததால் பரபரப்பு!

சென்னை, அக்.12-

டெல்லியில் இருந்து சென்னை வந்துகொண்டிருந்த இண்டிகோ பயணிகள் விமானத்தில் தீ விபத்து ஏற்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. 200க்கும் மேற்பட்ட பயணிகளுடன் நடுவானில் வந்தபோது விமானத்தில் தீப்பிடித்ததால் அவசர அவசரமாக அந்த விமானம் ஹைதராபாத் சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

நடு வானில் பறந்துகொண்டிருந்த போது விமானத்தில் கரும்புகை ஏற்பட்டு தீப்பிடித்ததால் உள்ளே இருந்த பயணிகள் பலரும் அச்சத்தில் அலறினர். இதையடுத்து விமானி துரிதமாக செயல்பட்டு ஐதராபாத் சர்வதேச விமான நிலையத்தில் விமானத்தை பத்திரமாக தரையிறக்கினார்.

இதன் பிறகு விமானத்தில் இருந்த பயணிகளும் அவசர அவசரமாக பத்திரமாக தரையிறங்கினர். இதன் பிறகே பயணிகள் நிம்மதி பெருமூச்சு விட்டுள்ளனர். விமானத்தில் இருக்கைக்கு மேல்பகுதியில் தீப்பிடித்து கரும்புகை வெளியேறுவது போன்றும், பயணிகள் அலறித் துடிப்பது போன்ற வீடியோக்களும் சமூக வலைத்தளத்தில் பரவி வருகின்றன.

டெல்லியில் இருந்து சென்னைக்கு இண்டிகோ விமானம் ஒன்று 200க்கு மேற்பட்ட பயணிகளுடன் இன்று பிற்பகல் புறப்பட்டுள்ளது. நடுவானில் விமான பறந்து கொண்டிருந்த போது தான் சிறிய அளவிலான தீ விபத்து ஏற்பட்டு இருக்கிறது. உடனடியாக விமானத்தில் பயணித்த ஊழியர்கள் தீயை அணைத்தனர். எனினும் பாதுகாப்பு காரணமாக உடனடியாக விமானமானது ஐதராபாத் விமான நிலையத்தில் பத்திரமாக தரையிறக்கப்பட்டது.